# வங்கி சேவைகள் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்படுமா?

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலேசதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9 இதழ் 22

போன் : 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ மாசி 20 ஜுலகம் 21 சனிக்கிழமை 4-3-67

கொழும்பு, வெள்ளி

வங்கி சேவைகளை அவசரகாலச் சட்டத்தினகீழ் அத்தியாவசிய சேவையாக அரசாங்கம் பிரகனப்படுத்துமா?

இதுசம்பந்தமான ஆலோசனை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட விருப்பதாகத் தெரியவருகிறது,

வங்கிகள் வேலைநிறுத்தம் கடந்த ஒரு மாதத்துக்கு மதிகமாக நடைபெற்று வருகிறது. வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் தொழில் அமைச்சர் பல முயற்சிகளைமேற் கொண்ட போதிலும், முயற்சி எதுவும கைகூடவில்லை.

இதற்கிடையே இப்பொழுது அமுலிலிருக்கும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் வங்கி சேவைகளை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப் படுத்தி வங்கி ஊழியர்களை வேலைக்குத் திரும்ப வைக்க அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறப்படவிருப்பதாகத் தெரியவருகிறது. நீடித்துவரும் வங்கிகள் வேலைநிறுத்தத்திஞல் நாட்டின் பொருளாதார நிலையில் மிகவும் வீழ்ச்சிஏற்பட்டிருப்பதையும் உணவுப்பொருள்களை நாட்டுக்கு வரவழைப்ப

[6-ம் பக்கம் பார்க்க]

# சுதந்திரா, ஜனசங், தி. மு. க. கூட்டு அமைப்பு நிறுவ முயற்சி

## லோகசபை எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆலோசனை

புதுடில்லி, மார்ச் 3

**இந்திய பார்லிமெண்டின் லோகசபையில் எதிர்க்கட்சிக் கூட்டு அமைப்பு ஒன்றை அமைக்க சுதந்திராக்கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், ஜனசங் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் ஆலோசித்து வருகிருர்கள்.**

இந்தக் கட்சிகளிடையே கூட்டு அமைப்பு ஒன்று ஏற்படுமானுல் இந்திய லோகசபையில் அது வலுவான எதிர்க்கட்சியாக அமையும்.

சுதந்திராக்கட்சியும், ஜனசங்கும் மேற்குநாடுகளுடன் நெருங்கிய உறவை விரும்புபவை. அத்துடன் அவை தீவிர வலதுசாரிக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவை. ஆனுல் தி. மு. க. தீவிர சோஷலிஸத்தை ஆதரிக்கிறது. எனவே இக்கூட்டு முன்னணி அமைப்பதில் சகடம் ஏற்படக்கூடுமென்றும் அரசியல் அவதானிகள் கருதுகிருர்கள்.

லோகசபையில் சுதந்திரக் கட்சிக்கு 44 பிரதிநிதிகளும் ஜனசங்கிற்கு 45பிரதிநிதிகளும் தி. மு. கழகத்திற்கு 25 பிரதிநிதிகளும் இருக்கின்ருர்கள். இவர்கள் கூட்டு சேர்வார்களானுல் அந்தக் கூட்டு அமைப்பு 104 பேர் இருப்பார்கள். ஆனுல் இடதுசாரிகளைப் பொறுத்தவரை 64 பேரே இருப்பர். இதலனுல் வலதுசாரிக்கொள்கைகளைக் கொண்ட கூட்டு அமைப்பில் ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு சரியானமுறையில் சவால் விடுக்கும் எதிர்க்கட்சியாக அமையும் என்று நம்பப்படுகிறது.

புதிய மந்திரிசபை அமைக்கப்பட்டு லோகசபை கூடும் வரை பதவியில் இருப்பது பற்றி இன்று பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி ஜனுதிபதியைச் சந்தித்துப் பேசினர்.

லோகசபையைக் கலைப்பதற்கான ஒரு பிரமாணத்தில் ஜனுதிபதி இன்று கையெழுத்திட்டார். புதிய லோகசபை பற்றிய பிரமாணம் நாளையதினம் அறிவிக்கப்படும்.

## இரணைமடுக்குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீர்

### மந்திரிகள் கூட்டத்தில் ஆராயப்படும்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்ட குடிதண்ணீர் விநியோகத்தை விஸ்தரிக்கும்முகமாக இரணைமடுக் குளத்திலிருந்து குழாய்மூலமயாழ்ப்பாண மாவட்டத்துக்கு தண்ணீர் விநியோகம செய்வதுபற்றி ஆராய விரைவில் அமைச்சர்களைக்கொண்ட உயர்தரமகாநாடொன்று நடைபெறவிருக்கின்றது.

[6-ம் பக்கம் பார்க்க]

## "காங்கிரஸ் கொள்கைகளை கடைப்பிடிக்கத்தயார்"

### ஆனுல் தம்மைப்பாதிக்கக் கூடாது என்கிருர் அண்ணுதுரை

சென்னை, மார்ச் 3

திராவிடமுன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைப் பாதிக்காத காங்கிரஸின் கொள்கைகளை நாம் நிச்சயம் கடைப்பிடிப்போம் என்று தி. மு. க. தலைவர் திரு. ஸி. என். அண்ணுதுரை இன்று பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் கூறினுர்.

உணவுதானியக்கொள்கை தொடர்ந்திருக்கும் என்று தெரிவித்த திரு. அண்ணுதுரை தேர்தலின்போது அளித்த உறுதிமொழிகளைப் பின்பற்றுவோம் என்றும் நிலவரி ரத்துக்கும் மதுவிலக்கைத் தீவிரப்படுத்துவதிலும் நாம் நடவடிக்கை எடுப்போம் என்றும் கூறினுர்.

— —

## மைசூர் முதன் மந்திரி

புதுடில்லி, மார்ச் 3

மைசூர் முதன்மந்திரி திரு. நிஜலிங்கப்பா இன்று காலை பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். உணவு உற்பத்தியை அதிகரிப்பதில் முழுமூச்சாக முதலிடம் செலுத்தப்போவதாக அவர் அறிவித்துள்ளார்.

**நகைகளுக்கு யப்பான் ஜுவலர்ஸ்**

64, கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 518 தந்தி: 'யப்பான்'

அருந்துங்கள்!

பால் சபையின் நீண்டகாலம் பாவிக்கக்கூடிய பால்




குளிர்ச்சியூட்டத் தேவையற்ற பால்

யாழ்ப்பாணத்தில் எங்கும் கிடைக்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பிறரது குற்றங்களை நாம் மன்னிக்காவிட்டால் நமது குற்றங்களை கடவுள் மன்னிப்பாரென்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? கடவுளின் கருணை உள்ளம்போல் நமது உள்ளமும் கருணை காட்டி மன்னிக்கக் கூடியதாக இருக்கவேண்டும்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna,
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ௵ மாசி மீ 20 (4-3-67)

## வேலை நிறுத்தங்கள்

மீண்டும் வேலைநிறுத்தங்களைப்பற்றி எழுத வேண்டியவர்களாகஇருக்கிறோம். வங்கி ஊழியர்களின் வேலைநிறுத்தம் ஒரு மாதத்துக்கு மேலாகநடந்தும் அது முடிவதற்கான அறிகுறிகளைக் காணவில்லை. இதற்கு மாறாக அது மேலும் நீடிப்பதுடன், கூட்டுறவு வங்கிகள், இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் முதலிய ஸ்தாபனங்களுக்கும் இது பரவி, பொதுமக்களுக்கும், நாட்டுக்கும்பெரும் கஷ்டநஷ்டங்களை விளைவித்து வருகின்றது.

ஊழியர்கள் பொதுவாக ஏழைகள். மாதச் சம்பளம் பெற்று கைக்கும் வாய்க்குமாக ஜீவிப்பவர்கள். பலர் கடன் பட்டுமுள்ளனர். வேலைநிறுத்தம் நீடிக்க நீடிக்க அவர்கள் சம்பளத்தை இழக்கின்றனர். இதனால் அவர்கள் குடும்பக் கஷ்டங்கள் அதிகரிக்கும். ஆகவே வேலைநிறுத்தத்தை அனாவசியமாக நீடிக்க அவர்களில் யாரும் ஆவலுடன் இருக்க முடியாது. இதற்குமாறாக, கண்ணியமான முறையில் இதைக் கூடிய சீக்கிரத்தில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதே அவர்களது கவலையாகும்.

இதில் அரசாங்கத்துக்கும் சிறப்பாக பிரதமருக்கும்தான் அதிகபொறுப்புண்டு. இருதரப்பினரும் பிடிவாதமாக இருப்பதாகக் கூறி தாங்கள்வாளா இருக்கமுடியாது. அவசர நெருக்கடிநீடித்து விசேஷ அதிகாரங்களும் பிரதமர் பெற்றிருக்கிறார். ஆகவே பொதுமக்கள் உள்ளிட்டு சம்பந்தப்பட்ட எல்லாருடைய நன்மையையும் கருதி, கட்டாய மத்தியஸ்தத்துக்கு இப்பிரச்னைகளை விட்டு, வேலை நிறுத்தத்தைஉடன் முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்று பிரதமர் உடன் தமது அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். இன்றேல் அவரும் அவரது அரசாங்கமும் தங்கள் பொறுப்பையும்கடமையையும் செய்யாமல், பொதுமக்களின் ஆதரவையும் நம்பிக்கையையும் மேலும் இழப்பவர்களாவர்.

# 'கந்தபுராணம் இருளில் ஒரு வழிகாட்டி'

—பண்டிதமணி

## யாழ்ப்பாணத்தில் பண்டிதமணிக்கு அளிக்கப்பட்ட கோலாகலமான பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், சனி

''கந்தபுராணத்தை ஒரு தொடரால் விளக்குவது என்றால் 'இருளில் ஒளிதரும் சுடர்' என்று சொல்லலாம். சைவமும் தமிழும் இருள் படிந்து மூழ்கின்றகாலத்தில் கந்தபுராணம்ஒரு ஒளிதரும் விளக்குப்போல வழிகாட்டியாக அமைந்தது. இதனை ஆறுமுகநாவலரும், யோக சுவாமிகளும் விளக்கியுள்ளார்கள். தமிழ் மணம் கமழும் இடங்களிலெல்லாம் கந்தபுராணப் படிப்பை நடாத்தும்படி இவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். மகான்களுடைய ஆன்ம சக்திகள் பரிசுத்தர்களான பெரியார்களின் ஆன்மசக்திகளுடன் கலந்தபின் அவர்கள் மறைந்தபின்னும்கூட அவர்களது கருத்துக்கள் நின்றுநமக்குவழிகாட்டும்.''

மேற்கண்டவாறு நேற்று முன்தினம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கந்தபுராணம், தக்ஷ காண்டத்திற்கு உரை எழுதியதற்காக தமுக்களிக்கப்பட்ட பாராட்டு விழாவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பேசுகையில் குறிப்பிட்டார்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் கந்தபுராணம்-தக்ஷ காண்ட உரை நூல் சிவிகையில் வைக்கப்பட்டு, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையும் மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக விழா அரங்கிற்கு அழைத்துவரப்பட்டார்.

திரு. த. இராசேந்திரம் பாராட்டுபசார வாழ்த்து மடலை வாசித்தார். திரு. அ. பஞ்சாட்சரம் வரவேற்புரை நிகழ்த்தினார். நீதியரசர் திரு. வி. சிவசிப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பண்டிதமணி தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''கடவுள்தான் நீதி. தமிழில் நீதிதான் சைவம். எனவே சைவம் தான் கடவுள் என்பது வெள்ளிடைமலையாகின்றது. இதனைக் கந்தபுராணம் நன்கு விளக்குகின்றது. கொழும்பிலே பிரசித்திபெற்ற ஒரு விநாயகர் ஆலயத்தில் திரு. ஸ்ரீகாந்தா கடந்த சில வருடகாலமாக தொடர்ந்து கந்தபுராணப் படிப்பை நிகழ்த்திவருவதும், விஞ்ஞானப் பேராசிரியர் திரு. ஆ. வி. மயில்வாகனம் கந்தபுராணத்தையும், உரைகளையும், விமர்சனங்களையும் ஆராய்ந்து வருவதும், மொழி, சமயப் பற்றற்று முனீஸ்வரன் ஆலயத்தில் கிராமப்புறத் தமிழில் எல்லா மக்களும் சேர்ந்து கந்தபுராணத்தில் 'தவத்தால் விதியை வெல்லலாம்' என்பதனை விளக்கும் மார்க்கண்டேயர் நாடகத்தை நடாத்திவருவதற்கு உறுதுணையாக அதனை நூல் வடிவில் பேராசிரியர் சின்னத்தம்பிவெளியிட்டதும்எவராலும் மறக்க முடியாதசேவைகளாகும். இந்த கந்தபுராண தக்ஷ காண்ட உரையை நூல்வடிவாக்கி வெளியிட்ட பேராதனைப் பல்கலைக்கழக இந்துமாணவர் மாமன்றத்தினரின் இந்த அளப்பரிய தேவையை தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் மறக்க முடியாது,''

சமஸ்கிருதப் பேராசிரியர் திரு. சீதாராம சாஸ்திரிகள் பேசுகையில், இந்நூலைத் தமிழ்மக்கள் அனைவரும் படிக்கவேண்டுமென்றும், திரு. ச. அம்பிகைபாகன் பேசுகையில் வடமொழிக் கந்தபுராணத்திலும் இக் கந்தபுராணம் மிகச்சிறப்பானதாக உள்ளதென்றும், கலாநிதி ஆ. சதாசிவம் பேசுகையில் இந்நூல் வெயிட்ட பின்னர் பல்கலைக்கழகத்தில் எங்கும் தமிழ் மணமே வீசுகின்றதென்றும், பேராசிரியர் சின்னத்தம்பி பேசுகையில் இந்நூல் வெளியிட்டதைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதென்றும், இதன்பிரதிபலிப்பாக அங்கு நான்கு கோபுர முருகன் ஆலயம் வெகுவிரைவில் மிகச்சிறப்பாக அமைக்கப்படுமென்றும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பேசுகையில் பண்டிதமணியின்

[6-ம் பக்கம் பார்க்க]

## திரு. இலங்கரத்ன கூற்று

பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற திரு. இலங்கரத்ன, கொலன்னாவை இடைத் தேர்தலில் வெற்றிபெற்றதைக் குறித்து மகிழ்ச்சியடைய நியாயமுண்டு. ஆனால் அந்த மகிழ்ச்சியில் அவர் வகுப்புத் துவேஷத்தைக் கக்கி இருப்பது அவருக்கோ நாட்டுக்கோ நல்லதல்ல.

சென்ற ஐந்து இடைத் தேர்தல்களிலும் தோல்வியடைந்ததால், தேசீய அரசாங்கம் ராஜினாமாச் செய்து பார்லிமெண்டைக் கலைத்துவிட வேண்டுமென்று கேட்கின்றார், தொகுதிமாறிய திரு. இலங்கரத்ன. தேசீய அரசாங்கம் இடைத் தேர்தல்களில் வெற்றிபெற முடியவில்லை என்பது உண்மையே. ஆனால் அந்த ஸ்தானங்களெல்லாம் ஏற்கனவே எதிர்க்கட்சி வசமிருந்தனவே. இடைத் தேர்தல்கள்மூலம் எதிர்க்கட்சி அவற்றைக் காப்பாற்றிக் கொண்டுள்ளன. இதனால் பார்லிமெண்ட் சபையிலே தேசீய அரசாங்கத்தின் பலம் குறைந்துவிடவில்லை. அப்படி இருக்க ஏன் அரசாங்கம் ராஜினாமாச் செய்ய வேண்டும்?

பொதுத் தேர்தலில் தமது தோல்விக்கு 4000 இந்திய வாக்குகளே காரணமென்கிறார் அவர். இந்தியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் திரு. டட்லி சேனநாயக்கா ஒரு வாக்குறுதி அளித்திருப்பதாயும், தாம் அதிகாரத்துக்கு வந்தால் சாஸ்திரி-ஸ்ரீமா ஒப்பந்தத்தை அமுலுக்குக் கொண்டுவராமல் இருப்பதாக ஒப்புக்கொண்டிருப்பதாகக் குற்றம்சாட்டுகிறார். கொலன்னாவையின் புதிய பிரதிநிதிக்கு இதற்குத் தக்க பதிலளிக்க பிரதமருக்குத் தெரியும். உண்மையைப் பொதுமக்களும் அறிவர். ஆனால் இலங்கையிலே ''சமதர்ம ராஜ்யம்'' ஏற்படுத்தப் போவதாகக் கூறும் ஒரு பொறுப்புள்ள தலைவர், இப்படியான வகுப்புவாதம் பேசி, பொதுமக்கள் மனதிலே துவேஷ வித்துக்களை விதைப்பதுதான் துரதிருஷ்டமும் ஆபத்துமாகும். உண்மை சமதர்மம் மனிதாபிமானத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமேயன்றி வகுப்புவாதத்தையல்ல.

# ஐயாறன் எழுதுகிறது

முந்தாநாள் எனக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டது. ஒரே சமயத்தில் மூன்று நிகழ்ச்சிகளுக்குச் செல்லவேண்டும். ஒன்று பண்டிதமணியின் வைபவம். இது வைத்தீஸ்வரவித்தியாலயத்தில்இரண்டாவதாக, அன்பர் வீரமணியாத்த ''திருமயிலைக் குறவஞ்சி'' நாட்டிய நாடகம், திருநெல்வேலி பாரதி கலாமன்றத்து மாணவிகள் நடிப்பது. இது நகரமண்டபத்தில் மூன்றாவது ஒரு முக்கிய கூட்டம்.

இதைப்பற்றிச் சற்றே திகைக்கும்போது, முன்னர் யாரோ ஒருவர் சொன்னது நினைப்புவந்தது. ''யாழ்ப்பாணம் ஒரு கலாசாரப் பாலைவனம்'' என்றார். அவர் இப்போது இங்குவந்து பார்த்தால் கன்னத்தில் போட்டுக்கொண்டு மன்னிப்புக் கேட்பார்.

சமீபத்திலே நம் யாழ்ப்பாணத்தில் பல பல அரிய கலை நிகழ்ச்சிகளும், பெரியோர்களைக் கௌரவிப்பதற்கான வைபவங்களும், இலக்கியக் கூட்டங்களும் நடப்பதைப் பார்க்கின்றோம். அருங்கலைகளும், இலக்கிய ரஸனைகளும் இங்கு உயிருடன் வளர்ந்துவருவதற்கு இவை நல்ல அத்தாட்சிகளல்லவா?

ஃ ஃ ஃ

தெருவெல்லாம் இருபுறமும் தோரணங்கள், மேளதாளத்துடன். கோவில் மரியாதைகளுடனே பண்டிதமணியை ஊர்வலமாக அழைத்துவந்தார்கள். பண்டிதமணி தாங்கமுடியாத மாலைகளுடன் காட்சியளித்தார். மாலையைப் பற்றி இப்பத்திகளிலே முன்னர் எழுதியிருந்தேனல்லவா? அதனால் தான் அவற்றைத் தாம் கழற்றவில்லை என்று சிரித்துக்கொண்டே சொன்னார் அவர். இங்கு எழுதும் எனது புன்மொழிகளையும் அப்பெரியார் படிப்பதை அறியப் பயமாகவும் பெருமையாகவுமிருந்தது.

கந்தபுராண விரிவுரை நூல் ஒரு பெரிய புத்தகம். அதையும் ஒரு வெள்ளி வேலுடனே சிவிகையில் வைத்துக்கொணர்ந்தனர். இந்நூல் வெளிவர உதவிய பேராசிரியர் சின்னத்தம்பியையும் மாலைசூட்டிவரவேற்றனர் நன்றியுள்ள நம் யாழ்நகர மக்கள். வித்தியாலயமண்டபம் திருவிழாக் கோலமாகக் காட்சியளித்தது. தமிழ் மன்னர் இல்லையே மரியாதை செய்ய என்று குறைப்பட்டேனல்லவா? அக்குறை பெரிதும் தீர்ந்தது. அறிஞர்கள் பலர் பண்டிதமணியை பல பல விதங்களில் போற்றினர். கேட்கக் கேட்க ருசியாக இருந்தது.

எழுந்துவரவே மனமில்லை. ஆனாலும் நகரமண்டபத்துக்கு ''திருமயிலைக்குறவஞ்சி''யைக் காணச்செல்ல வேண்டும். பாதியில்எழுந்து நடந்துவநதேன். காரோ, டாக்ஸியோ இல்லை. ஓரிடத்தில் சற்றே திகைத்து நின்றேன். ஒரு கார் எங்கிருந்தோ வந்து பக்கத்தில் நின்றது. எங்கே செல்ல வேண்டுமென்று உள்ளிருந்த அந்த அன்பர் கேட்டார். நம்பமுடியவில்லை! டவுன் ஹாலுக்குச் சென்று அக்கலை நிகழ்ச்சியை சற்றே கண்டேன்.

அன்பர் வீரமணியை அரசாங்க அதிபர் பாராட்டி பாரதி கலாமன்றத்தின் சார்பாக ஒரு தங்கப்பதக்கம் பரிசளித்தார். அங்கும் மண்டபம் நிறையக் கலாரஸிகர்களின் கூட்டம். பளையிலே பொதுஜன நூல்நிலைய உதவி

[4-ம் கலம் பார்க்க]

[5-ம்கலத் தொடர்ச்சி]

நிதிக்காக இந்தக் கலைநிகழ்ச்சியை வெற்றிகரமாக ஒழுங்கு செய்தவர்களையும் சிறப்பாக பாரதி கலாமன்றத்தைச் சேர்ந்த திருமதி ஞானமணி செல்லையாவையும் பாராட்டவேண்டும். அரசாங்கம் செய்யமுடியாததை இம்மன்றத்தார் பொதுமக்கள் உதவியுடனே செய்ய முடிந்தது போற்றத்தக்கதாகும்.

இரண்டொரு காட்சி தான் பார்த்தேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். கலைநிகழ்ச்சி அழகாகவும் கவர்ச்சியாகவும் அமைந்திருந்தது. வீரமணி அய்யரைப் பாராட்டி, பாபநாசம்சிவன், ஜி. என். பி., கிருபானந்தவாரியார் பித்துக்குளி முருகதாஸ் முதலிய தமிழக மேதைகள் போற்றி எழுதியுள்ளதை அவ்விழா விசேஷ வெளியீட்டில் கண்டேன். மிகப்பெருமையாக இருந்தது. பலே வீரமணி! வாழ்க வாழ்க!

ஃ ஃ ஃ

இரண்டொருகாட்சியைப் பார்த்துவிட்டு, திரும்பியும் வித்தியாலயத்துக்குப் பண்டிதமணியின் பேச்சைக் கேட்க ஆவலுடன் வெளிக்கிட்டேன். ஒரே ஒருடாக்ஸி தான் அங்கு இருந்தது. அதில் யாரோ சில அன்பர்கள் ஏறிவிட்டனர், என்றாலும் என்னையும் ஏற்றிக் கொண்டுவந்து அன்புடன் கொண்டுவிட்டனர். கருணையுள்ள இறைவன் எப்படி எல்லாம் உதவுகிறான்!

ஃ ஃ ஃ

கந்தபுராண தக்ஷகாண்ட விரிவுரை நூல் பெரியது. விலை போடவில்லை. விசாரித்ததில் ரூபா 19-25 என்று கேள்விப்பட்டேன். சிலர் ஆயிரம் ஐநூறு என்றும் தந்துள்ளனராம். இதற்கு எவ்வளவும் தரலாம். ஆனால் ஏழைத் தமிழரும் வாங்கி, பண்டிதமணியின் பொன்னான கருத்துக்களை அறிந்து உய்ய, மலிவு விலையில் கிடைக்கச்செய்யவேண்டும். தமிழரிலுள்ள சில செல்வந்தர்கள் நினைத்தால் இது பெரிய காரியமல்ல.

ஃ ஃ ஃ

மற்றொரு கூட்டம் என்ன ஆயிற்றென்று கேட்கிறீர்களா? பண்டிதமணி வைபவம் முடிய இரவு 10-30 ஆகிவிட்டது அக்கூட்டத்துக்கு எப்படிச் செல்வது?

ஃ ஃ ஃ

மூப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை இறப்பதில்லை, சேர்ப்பது காட்டகத்தூரினுமாகச் சிந்திக்கினல்லால், காப்பது வேள்விக் குடிதண்துருத்தி எங்கோன் அரை மேல், ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல் நாம் இவர்க் காட்படோமே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

O

ஆராயுங்கால் எங்கள் தலைவர் பிறத்தலுமில்லை பின்பு வளர்ந்து முதுமை அடைதலுமில்லை. முடிவில் இறந்தொழிதலுமில்லை. உறைவிடம் காட்டிடத்துள்ளது. அதுவன்றி ஊர்களுள் தமக்கு உரித்தாகக் காப்பது திருவேள்விக்குடியும் தண்ணிய திருத்துருத்தியும். அன்றியும் அரைக்கண் இறுகக் கட்டுவது பாம்பு. இவற்றை முன்பே அறிந்தோமாயின், நாம் இவர்க்கு ஆட்படாதொழில் எவ்வாறு. இவற்றை அறிந்தோமாயின் இவர்க்கு ஆட்படாதொழிவோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெனடிகொலை: இரண்டுமாதங்களுக்குமுன்னர் சதிதிட்டம் வகுக்கப்பட்டது?

## விசாரணையில்புதிய திருப்பம்

நியூ ஆர்லின்ஸ், மார்ச் 3 அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன் எவ். கென்னடி சுட்டுக் கொலை செய்யப்படுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் நியூ ஆர்லின்ஸில் சதித்திட்டம் வகுக்கப்பட்டு அது சம்பந்தம்மாக ஒரு கூட்டமும் நடைபெற்றது என்று கென்னடி கொலை சம்பந்தமாக நியூ ஆர்லின்ஸ் மாவட்ட அட்டோர்ணி ஜிம் கரிஸன் சார்பில் விசாரணை நடத்திவரும் திரு. வில்லியம்குர்விச் தெரிவித்துள்ளார்.

1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கென்னடி கொலைச் சதித்திட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கூடி கடைசி ஆலோசனை நடத்தினர் என்று இப்பொழுது நடைபெற்றுவரும் விசாரணைகளின் போது தெரிய வந்திருப்பதாக திரு. குவிர்ச் கூறியுள்ளார்.

ஜனதிபதி கென்னடி 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் திகதி கொலை செய்யப்பட்டார்.

கென்னடி கொலைசம்பந்தமாக முதல்வதாகக் கைது செய்யப்பட்ட திரு. கிளே ஷோ [54 வயது] இப்பொழுது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் இரண்டாவது உலகயுத்தத்தின் போது அமெரிக்க இராணுவத்தில் ஒரு மேஜராக விருந்தார்.

திரு. குவிச் நேற்று பத்திரிகை நிருபர்களிடம் தெரிவிக்கையில், கைதுசெய்யப்பட்ட கிளே ஷோ ஜனபதி கென்னடியைக் கொலை செய்யமேற்கொள்ளப்பட்ட சதித்திட்டத்தில் பங்கு கொண்டதாகக் குற்றம் சுமத்தப்படுவார் என்று கூறினர்.

மேலும் சிலர் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கென்னடி கொலை [புதிய] விசாரணையில் முக்கிய நபராகக் கருதப்பட்ட 48 வயதுள்ள விமானிதிரு டேவிட் பெரி ஒரு வார காலத்துக்கு முன்னர் இறந்துகிடக்கக் காணப்பட்டார். இவரது மரணம் குறித்து நடைபெற்ற விசாரணையில் இயற்கை மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.



### நேபாளமன்னர்

டாக்கா, மார்ச் 3 நேபாள மன்னர் மகேந்திராவும் ராணி ரத்னவும் நேற்று இங்கு வந்துசேர்ந்தனர். பாகிஸ்தானில் இவர்கள் சுமார் ஒரு வார கால சுற்று விஜயம் செய்வார்கள்.

### சிரமதானம்

வல்வெட்டித்துறை, வெள்ளி பொலிகண்டி வீரபத்திர கோவிலுக்கு அருகாமையிலுள்ள 1080 அடி நீளமுள்ள வீதியை சிரமதான மூலம் சீர்செய்யப்பட்டது. இவ் வீதியை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா திறந்துவைத்தார்.

### கடன்தொல்லையால் தற்கொலை

குரும்பசிட்டி, வெள்ளி தற்கொலைசெய்து உயிர் துறப்பேன் எனப் பயமுறுத்திக்கொண்டுவந்தவர் இறுதியில் உண்மையாகவே நச்சுத்திராவகம் அருந்தி தமது வியாபாரநிலையத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். குரும்பசிட்டியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கந்தையா நடராசா [வயது 40] என்பவரே இந்நிலைக்குள்ளானவராவர்.

இறந்தவரது மரணம் சம்பந்தமாக தெல்லிப்பழை திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. என். சுந்தரமூர்த்தி விசாரணை நடத்தினர். காலம்சென்ற நடராசாவின் மனைவி சிவசோதியம்மா மரணவிசாரணையின்போது சாட்சியமளிக்கையில்கடன்தொல்லை தாங்கமுடியாது தற்கொலை செய்வேன், உயிர் விடுவேன் எனப் பல முறைகளிலும் பயமுறுத்திவந்துள்ளார் என்று கூறினர்.

திரு. நா. இராசையா, க. நடராசா, மகாலிங்கம் [மகன்] ஆகியோரும் சாட்சியமளித்தனர். காங்கேசன்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வி. சண்முகநாதன் பிரேதபரிசோதனை நடாத்தினர். தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### பலாலியில் விமானப் பயிற்சி

குரும்பசிட்டி, வெள்ளி இலங்கை ரோயல் விமானப்படை வீரர்கள் பலாலி விமானநிலையத்தில் தற்காலிகமுகாம் அமைத்துள்ளனர். இந்த முகாமில் தங்கியிருக்கும் வீரர்கள் விமான ஓட்டப்பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பயிற்சிபெறுவதற்கு இலங்கை ரோயல் விமானப்படையைச் சேர்ந்த சுமார் 8 விமானங்கள் இங்கு கொண்டுவரப்பட்டுள்ளன. பகல்நேரம் முழுவதும் விமானங்கள் கடலுக்கு மேலாக எந்த நேரமும் பறந்தவண்ணமே காணப்படுகின்றன.

### பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி வருடாந்த பரிசளிப்புவிழா இம்மாதம் 8-ந் திகதி மாலை கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. கல்விஅமைச்சின் சிரேஷ்ட காரியதரிசி டாக்டர் ஆனந்தகுருகே பிரதமவிருந்தினராக விழாவில் கலந்துகொள்கிறார். திருமதி குருகே பரிசில்களை வழங்குவார்.

### சமயக்கல்வி பெற வாய்ப்பு

மன்னர், வெள்ளி சமயச் சூழலில் மாணவர்கள் கல்வி கற்பதற்கு வகை செய்யும் முகமாக மன்னர் மாவட்ட வித்தியா ஆலோசகர் திரு. எஸ். நடராசா ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளார்.

ஒரு பாடசாலையில் எந்தச் சமயத்தைச் சேர்ந்த மாணவனும் தனது சமயத்தை அறிந்து கற்க வழி செய்யும் முகமாக இப்பகுதியிலுள்ள பாடசாலை ஒவ்வொன்றிலும் பல சமயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் கல்வி போதிப்பதற்கு இப்போது இந்த வித்தியா ஆலோசகர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதனல் சமய சமரசம் எதிர்காலப் பிரஜைகளான மாணவர்கள் மத்தியில் உருவாகும் என நம்பப்படுகிறது.

# இந்திய லோகசபை கலைக்கப்பட்டது

## 16-ம் திகதி சபை கூடும்

புதுடில்லி, மார்ச் 3 இந்திய லோகசபை (பார்லிமெண்ட்) இன்று கலைக்கப்பட்டது. இம்மாதம் பதினறும் திகதி லோகசபை புதிதாகக் கூடும்என்றும் அன்றைய தினம் அங்கத்தவர்கள் பதவிப் பிரமாணம் செய்வார்களென்றும் அறிவிக்கப்பட்டது.

பதினேழாம் திகதி லோகசபை சபாநாயகர், உபசபாநாயகர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவார்கள். பதினெட்டாம் திகதி இரண்டு சபைகளையும் கொண்ட கூட்டத்தில் ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் உரைநிகழ்த்துவார்.

இம்மாதம் இருபதாம்திகதி பொதுபட்ஜட், ரயில்வே பட்ஜட் ஆகியவை சமர்ப்பிக்கப்படுமென்றும் இருபத்து மூன்றும் திகதி இடைக்காலச் செலவுத் தொகை மீது வாக்களிப்பு நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**மைசூர்**

மைசூரில் திரு, நிஜலிங்கப்பா தலைமையிலான புதிய மந்திரி சபை இன்று காலை பதவியேற்றது. மைசூர் முதன் மந்திரியாக திரு. நிஜலிங்கப்பா நான்காவது முறையாகப் பதவியேற்றுள்ளார்.

**பீஹார்**

பட்னவில் நேற்று கூட்டுக் கட்சிகளின் தலைவர் பீஹார் கவர்னரைச் சந்தித்து காங்கிரஸ் அல்லாத அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து ஆலோசனை நடத்தினர். இம்மாதம் பதினைந்தாம் திகதி பீஹார் புதிய சட்டசபை கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**காஷ்மீர்**

ஜம்மு—காஷ்மீர் சட்டசபைத் தேர்தலில்இதுவரை எழுபத்தியொரு தொகுதிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. சட்டசபையின் மொத்த ஸ்தானங்கள் 75 ஆகும். காங்கிரஸ் 58 ஸ்தானங்களிலும் தேசிய முன்னணி எட்டு ஸ்தானங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.

தமிழ்நாடு ஆட்சிமாற்றம்:

# "நினைத்தேன்; சாதித்தேன்"

—ராஜாஜி

## "திறமையான ஆட்சிக்கு பலரிடம் யோசனை கேட்பேன"

—அண்ணுதுரை

சென்னை, மார்ச் 3 "கடந்த பத்து ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சியை தமிழ் நாட்டில் மாற்றியமைக்க வேண்டுமென்று திட்டமிட்டு வந்தேன். இப்போது அந்தக்கனவு நிறைவேறிவிட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்தபோது கூட இவ்வளவு மகிழ்ச்சி அடையவில்லை" என்று சுதந்திரா கட்சி ஸ்தாபகர் ராஜாஜி சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார். நன்றி தெரிவிப்பதற்காக நடந்த இக் கூட்டத்துக்கு சென்னை மேயர் சம்பந்தம் தலைமை வகித்தார். ஆறு லட்சத்துக்கு அதிகமானவர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் லீக தலைவர் இஸ்மாயில் சாகிபு, ம.பொ. சிவஞானகிராமணியார், நல்லசிவம், மூக்கையாதேவர், இராமமூர்த்தி, அண்ணுதுரை ஆகிய கட்சித்தலைவர்கள் கலந்து கொண்டனர். ராஜாஜி மேலும் பேசுகையில், டில்லிஆட்சியில் விரைவில் தி. மு. க. ஜனசங்கம், சுதந்திரா இணைந்து தேசத்தை ஆளப் போகின்றனகள் எனக் கூறினர்.

முஸ்லிம் லீக் தலைவர் இஸ்மாயில் சாகிபு [illegible] பொழுது, "[illegible] நாட்டிற்கு நன்மைசெய்யும். இதற்கு எங்களுடைய ஒத்துழைப்பு நிச்சயம் உண்டு," என்று கூறினர்.

### "யோசனை கேட்பேன்"

தி. மு. க. தலைவர் திரு. ஸி. என். அண்ணுதுரை பேசுகையில், தமிழக மக்கள் உண்மையான ஜனநாயகத்துக்கு மாபெரும் வெற்றியை தேடித்தந்துள்ளார்கள் என்றும் தி. மு. க. மந்திரி சபைக்கு அடுக்கடுக்காக ஆபத்து வரும் என்று அரசியல் வட்டாரங்களில பேசப்படுவதாகத்தாம் அறிவதாகவும் அதைப் பற்றி கவலைப்படப்போவதில்லை என்றும் தி. மு. க. ஆட்சியில் ராஜாஜியும், இஸ்மாயில் சாகிபுவும் நல்ல யோசனைகள் அவ்வப்பொழுது தருவார்கள் என்றும் காங்கிரஸ் கட்சித் தலைவர் காமராஜரிடமிருந்தும் பக்தவத்சலத்திடமிருந்தும்தாம் மேலான யோசனைகளை எதிர்பார்ப்பதாகவும் கூறினர்.

# குண்டு வீச்சை நிறுத்துமாறு செனட்டர்கெனடிகோரிக்கை

## அதிபர்ஜோன்ஸன் நிராகரிப்பு ?

வாஷிங்டன், மார்ச் 3. வடக்கு வியட்னமில் குண்டு வீசுவதை அமெரிக்கா நிறுத்த வேண்டுமென்று செனட்டர் ரொபர்ட் கெனடி நேற்று அமெரிக்கா செனட் சபையில் பேசுகையில் கோரினர்.

"வடக்கு வியட்னமில் குண்டு வீசுவதை நிறுத்தி கம்யூனிஸ்டுகளின் உண்மையான மனப்போக்கை அதிபர்ஜோன்ஸன்பார்க்கவேண்டுமென்றும் ஒருவார அவகாசமளித்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முயற்சிக்க வேண்டுமென்றும் செனட்டர் ரொபர்ட் கெனடி தெரிவித்தார். [illegible] அவர் மூன்றுயோசனைகளைத் தெரிவித்திருந்தார். இதில் குண்டுவீச்சை உடனடியாக நிறுத்துவது முதலிடம் பெற்றிருந்தது.

### டீன்ரஸ்க் நிராகரிப்பு

செனட்சபைக் கூட்டத்தில் பெருபர்ட் கெனடிக்கு அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன்ரஸ்க் பதிலளிக்கையில், குண்டுவீச்சை நிறுத்துவதன் மூலம் உடனடியான பலன் எதையும் எதிர்பார்க்க முடியாது என்று கூறினர்.

அண்மையில் வியட்னம் புதுவருட போர் ஓய்வின் போது அமெரிக்கா தனது குண்டுவீச்சை நிறுத்திய பொழுதிலும் வடக்கு வியட்னம் தனதுபோக்கை மாற்றவில்லை என்றும் சமாதானத்தில் அக்கறைகொண்டதாக வடக்குவியட்னம் எதையும் காட்டவில்லை என்றும் திரு. டீன்ரஸ்க் குறிப்பிட்டார்.

செனட்டர் ரொபர்ட் கெனடி யோசனையை அமெரிக்க அதிபரும் நிராகரித்திருப்பதாக வாஷிங்டன் வட்டாரங்கள் தெரிவித்தன.

### பதவியிலிருந்து ஓய்வு

கோப்பாய், வெள்ளி கடந்த பதினைந்து ஆண்டு காலமாக கோப்பாய் தபாற்கந்தோரின் அதிபராகக் கடமையாற்றிய திரு. ஆ. கந்தையா இம்மாதம் முதல் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

கடந்த முப்பது ஆண்டுகளாக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் லிகிதராகக் கடமையாற்றிய திரு. வேலுப்பிள்ளை ஏப்ரல் மாதத்திலிருந்து தமது பதவியிலிருந்து ஓய்வுபெறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக் கடிதம்

## சுழிபுரம்

— நமது நிருபர் க.வாமதேவன்

### அமைச்சரிடம் கோரிக்கை

சுழிபுரம் கிராமசபை எல்லைக்குட்பட்ட பகுதிக்கு விரைவில் மின்சாரவிநியோகம் செய்யவேண்டும் என்ற கோரிக்கையை திரு. அ. தையல்பாகர் தலைமையில் சென்ற கோஷ்டியினர் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ம். திருச்செல்வத்திடம் சமர்ப்பித்தனர்.

ஃ ஃ ஃ

### மண் திருட்டு

சுழிபுரம்-திருவடிநிலைக் கரையோரத்தில் களவாக வண்டி வண்டியாக கடற்கரை மணல் தினமும் அள்ளப்படுவதாக புகார் செய்யப்படுகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பாராமுகம் காரணமாக மணல் அள்ளுபவர்கள்மிகவும்துணிவாக மண்ணை அள்ளிக்கொண்டு செல்வதாகக் கூறப்படுகிறது.

ஃ ஃ ஃ

### இது ஒரு தொல்லை

கட்டாக்காலி கால்நடைகளின்தொல்லையால்இப்பகுதி வயல்களில் விதைக்கப்பட்ட பயிர்கள் செவ்வனே வளர முடியாமல் இருப்பதாகவிவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். கட்டாக்காலி கால்நடைகளை இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்களிடம் பலதடவைகளில் புகார் செய்திருந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம். கட்டாக்காலிகளால் இங்கு சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு செல்லக்கூடிய அளவுக்குநிலைமை வளர்ந்துள்ளதாகத் தெரிகிறது.

ஃ ஃ ஃ

### 'பாடசாலை பஸ் சேவை வேண்டும்'

''சுழிபுரத்தைச் சேர்ந்த கல்வி கற்கும் மாணவமாணவிகள், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, கந்தரோடை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு உயர் கல்வி கற்பதற்காகச்செல்லுகின்றனர். ஆகையால் ஒரு பாடசாலை பஸ்சேவையை உடன்ஆரம்பிக்கவேண்டும்' என்று சுழிபுரம் பஸ் பிரயாணிகள் சங்கம் இ. போ, ச. முகாமையாளரைக் கேட்டுக் கொண்டுள்ளது. இச்சேவையின் அவசியத்தை விளக்கி மகஜர் ஒன்றை சுழிபுரம் கிராமசபைப் பகுதி பஸ்பிரயாணிகள் சங்கம் போக்குவரத்து அமைச்சருக்கு அனுப்பியுள்ளது.

ஃ ஃ ஃ

### மீனவர் குறைபாடு

சுழிபுரம் மீனவர்களில் தொண்ணூறு வீதமானவர்கள், வீச்சுவலை மூலமாகவும், வள்ளங்கள் மூலமாகவும் மீன்பிடித்தொழில் செய்து தமது வாழ்க்கையை ஒட்டிக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் ஒருசிலர் வேறு சிலரின் உதவியைக்கொண்டு களங்கண்டிவலைமூலம் மீன் பிடிக்கமுயன்றுள்ளனர். இதனால் பெரும் சச்சரவு ஏற்பட்டு இரு கோஷ்டிகளாக பிரிந்து கோடும், முறைப்பாடும் சச்சரவுமாக இருக்கின்றனர். களங்கண்டி வலை மூலம் மீன்பிடிப்பதை தடை செய்ய வேண்டுமெனக் கோரி ஐம்பதுக்கு மேற்பட்ட மீனவர்கள் வட்டுக்கோட்டை எம்.பி. திரு. அ. அமிர்தலிங்கத்திடம்முறைப்பாடு செய்துள்ளனர்.

ஃ ஃ ஃ

### புதிய பிரிவு உதயம்

சுழிபுரம்கிழக்குப் பகுதி விரைவில் தனிக்கிராம சேவையாளர்பிரிவாக இயங்கவிருக்கிறது.

## பலாலி

— நமது நிருபர் வி. நவரத்தினராசா —

காங்கேசன்துறை பட்டின சபை ஊழியர்கள் உப உணவு பயிரிடுவதில் பெரிதும் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளனர். பட்டின சபை வளவுக்குள் கத்தரிக்காய், புடலங்காய் போன்ற உப உணவுப் பயிர்களை பயிரிடவிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

### சாரணர் அணித் தலைவர் பயிற்சி

வலி-வடக்கு கிழக்குப் பகுதி சாரண அணித் தலைவர்கள் பயிற்சி இம்முறை காங்கேசன்துறை அமெரிக்கன் மிஷன் ஆங்கிலப்பாடசாலையில் 22, 23-ம் திகதிகளில் நடைபெற்றது. இறுதி விழாவில் பாடசாலை அதிபர் திரு. கே. ஆர். சுப்பிரமணியம் பேசுகையில், ''சாரணர் தம்மை மறந்து நாட்டிற்கு சேவை புரியவும் விவசாயத்தை சாரண விதியென எண்ணி உழைக்க வேண்டுமென்றார்.

8 பாடசாலைகள் பங்கு பற்றிய நிலையத்தை பகுதிச் சாரணக்காரியதரிசி திரு. சி. எஸ். சுப்பிரமணியம் கொண்டு நடத்தினார். சாரண ஆணையாளர் திரு. அரசரட்ணம் தலைமை தாங்கினார்.

ஃ ஃ ஃ

### இரும்புப்பெட்டியில் இருப்பது ஏன்?

பட்டின சபைக்குரிய பணத்தைவங்கியில் போடாமல் பட்டினசபை இருப்புப் பெட்டியில் பூட்டி வைத்திருப்பதேன்? என்று 1-ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. கிருபாமூர்த்தி பட்டினசபை தலைவர் ஆ. சதாசிவத்திடம் எழுத்து மூலம் கேட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

### இராணுவ முகாமில் உப உணவுப்பயிர்

பலாலி இராணுவ முகாமில் உள்ள எல்லைக்குள் அரசாங்க வேண்டுகோளுக்கிணங்க உப - உணவு பயிர்ச்செய்கைக்காக முகாமில் முன் பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் வெண்காயம். கத்தரி, வெண்டி, மரவெள்ளி, வாழை ஆகிய உப-உணவுப் பயிர்களை பயிரிடும் திட்டம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளார்கள். இராணுவத் தளபதி ஹெய்ன் இத்திட்டத்திற்கான ஊக்கத்தை சிலநாட்களுக்குமுன் இங்கு விஜயம் செய்தபொழுது கவனத்திற்கு எடுத்துச்சென்றுள்ளார்.

ஃ ஃ ஃ

### மயிலிட்டிக்கு ஒரு குறை

மயிட்டியில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைப்பதென்று 1958-ம் ஆண்டு தொடக்கம் முயற்சிகள் நடைபெற்று வருகிறது. அதிகமீன்பிடி இடங்கள் மயிலிட்டியாக அமைந்திருந்தும் இக்குறைபாடு இதுவரை நிவர்த்தி செய்யப்படாததையிட்டு மயிலிட்டி மீனவர் ஏமாற்றமடைந்துள்ளனர். சாதாரண இடங்களில் மீன்பிடித்துறைமுகம் இருக்கும்போது இங்கு இல்லாதது பெருங்குறையாக இருக்கிறது. ஃ

### மருந்து இல்லை

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரி 'டிஸ்பென்சரி'யாய் மாறியதுமல்லாமல், இங்கு மருந்துகளும் ஊசி மருந்துகளும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாம். நோயாளிகள் தமக்குத் தேவையான மருந்தை வெளியே வாங்கவேண்டியுள்ளதாகப் புகார்செய்கின்கின்றனர்.

கடந்த மூன்று மாதங்களாகத் தொடர்ந்து இப்படி நடைபெற்று வருவதாகச் சொல்லப்படுகிறது. இதனால் நோயாளிகள் பெரிதும் அதிருப்திக்குள்ளாகியிருப்பதாகத்தெரிகிறது.

## ஆலயப் புனருத்தாரணம்

கோப்பாய், வெள்ளி

பல ஆண்டுகளாகப் பூசையின்றிப் பூட்டிவைக்கப்பட்டிருந்த இருபாலை வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுவருகின்றன. மீண்டும் கும்பாபிஷேகம் நடைபெறவிருக்குறது.

## வீடு தீக்கிரை

உடுப்பிட்டி, வெள்ளி

கரணவாய் தெற்கு, மணலாவடி என்னுமிடத்தில் நாகன் கறுவல் என்பவரின் வீடு தீக்கிரையானது. ஓலையால் மேயப்பட்டிருந்த இக் கல்வீட்டில் எரிந்து கொண்டிருந்த சிறுகை விளக்கினால் தற்செயலாக ஏற்பட்ட தீவிபத்தில் பிரஸ்தாப வீடு தீப்பற்றிக் கொண்டதாகக் கூறப்படுகிறது. தீக்கிரையான இவ் வீட்டைப் பார்வையிட்ட வடமராட்சிக் காரியாதிகாரி திரு.ஏ.சி. விசுவநாதன் நஷ்ட மதிப்பீடு எடுத்துச் சென்றுள்ளார்.

## இளம் விவசாயிகள் கழகம்

### அங்குரார்ப்பணம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

திக்கத்தில் இளம் விவசாயிகள் கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது வழக்கறிஞர் திரு. வி. பி. சுந்தரலிங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் ''இளம் விவசாயிகளால்தான் நாட்டுக்கு பெரிதுபயன் இருக்கிறது.'' என்றார்.

திருவாளர்கள் இராஜேந்திரம், த. இரத்தினசிங்கம், வி. விசுவலிங்கம் ஆகியோரும் பேசினர். இக் கூட்டம் கிராம சேவையாளர் திரு. எஸ். தேவராசா தலைமையில் திக்கம் எம். எம். பாடசாலையில் நடைபெற்றது.

## தெல்லிப்பழை கூட்டுறவு ஆஸ்பத்திரி

பலாலி, வெள்ளி

தெல்லிப்பழை கூட்டுறவு ஆஸ்பத்திரி மேலும் மூன்று லட்ச ரூபாய்க்கான கட்டிடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்புதிய கட்டிடத்தில் ஆப்பரேஷன் தியேட்டர், பிரசவ வார்ட் போன்றவை நவீன முறையில் கட்டப்படவிருக்கிறது.

## உடுவிலில் திறந்தவெளியரங்கு

உடுவில், வியா

உடுவில் கிராமசபையினரால் மிகப்பிரமாண்டமான அளவில் உருவாக்கப்பட்டு வரும் திறந்தவெளி அரங்கின் கட்டட வேலைகள் பூர்த்தியா விட்டன. இம் மாத முற்பகுதியில் இந்த திறந்தவெளி அரங்குதிறப்பு விழா நடைபெறும். உள்ளூராட்சி அமைச்சர் திரு.எம் திருச்செல்வம் திறந்தவெளி அரங்கைத் திறந்து வைப்பார்.

# வடஇலங்கை சங்கீதசபை பரீட்சைமுடிவுகள்

(தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், சனி

1966-ம் ஆண்டுவடஇலங்கைசங்கீதசபை, பரீட்சை முடிவுகள்வருமாறு -

## சாவகச்சேரி

[சாதாரண பகுதி]

சி.தயாபரன், செ.செல்வரதி, சி. வாசுகிதேவி, ச. கமலாதேவி, ந.இந்திராணி, ரா. சுமதி, கு. சுலோசனு, ஐ. சாரதாதேவி, த. விஜயலக்ஷ்மி, செ. புஷ்பநிதி, அ. ரத்தினபூபதி, கா. சரோஜினிதேவி, சு. ஞானம்பிகை, ஞா. சிவஞானம்.

### இரண்டாம் பகுதி

[சாதாரணபிரிவு]

க. செல்வராணி, பொ யோகாம்பிகை, ப. மகாருக்மணி, வெ. தயாபரி, ச. விமலேஸ்வரி, க. ஞானசக்தி, து. சரஸ்வதி, செ. செல்லம்மா, க. சாரதாதேவி, O பே. கமலாதேவி, ஃ செ. சொரூபராணி.

### மூன்றும் பகுதி

[சாதாரணபிரிவு]

செ. சரஸ்வதி, ப. வசந்தமலர், மு. புவனேஸ்வரி, சி. கமலாதேவி, மா. வரகுகராணி, மா. வனிதாமணி, கா. சரஸ்வதிப்பிள்ளை, இ. சரஸ்வதி, செ. சிவபாக்கியம், ஆ. தியாகேஸ்வரி, க. சரோஜினிதேவி, ச. நகுலாதேவி, செ. செல்லத்திலகம், ஃ பொ. ஸ்ரீ வாமதேவா வாய்ப்பாட்டு.

### ஆசிரிய பகுதி

[சாதாரணபிரிவு]

கனகபூபதி கனகரத்தினம்.

## பருத்தித்துறை

### முதலாம் பகுதி

[சாதாரண பிரிவு]

ப. மேரிஜசிந்தா, இ. அல்போன்சா இந்திராணி, அ. யோகம்மா, க. செல்லம்மா, க. இந்திராவதி, சி. சந்திராதேவி, வ. செல்வரட்ணம், இ. ஜெயசிறி, ச. சத்தியவதி, செ. செல்வராணி, ச. சொர்ணகலா, பா. ரதி, பா. பாலேந்திரராணி, தி. சந்திரலேகா, க. லோகராணி, க. பொன்ராஜினி, சி. ரஞ்சினி, வி. சந்திராதேவி.

### இரண்டாம பகுதி

[சாதாரணபிரிவு]

மா. பூமணி, ஆ. தேவி, ஃ O க. கமலினி, ஃ இ. பிரேமஜயந்தி, O இ. ராஜினி.

### மூன்றும பகுதி

[சாதாரணபிரிவு]

O இ. இன்பமலர், ச. புனிதவதி, இ. மாதினி

## கொழும்பு

### முதலாம பகுதி

[சாதாரணபிரிவு]

ச. சரோஜினிதேவி வயலின், பா. வானதி வீணை, ந. ரஞ்சினி வீணை, இ. இந்திரா வீணை, ச். பத்மினி, பூ. ரஜனி, ம. குமுதினி, ஆ. அருந்ததி, செ. விஜயராணி, சு. மகேஸ்வரி, இ. தேவகுமார், ந. கலாதேவி, சு. கேதீஸ்வரி, ப. ஞானம்பிகை, ஆ. தில்லைராணி, சோ. கனகாம்பிகை, தா. நிமலன், க. ஞானம்பிகை வயலின், ந. சகுந்தலா வீணை, வே. வசந்திரா வயலின், அ. அமிர்தலட்சுமி வீணை, பே. பரமேஸ்வரி வீணை, த. திருமகள் வீணை, த. யோகமலர் வீணை, ஸ்ரீ. சரோஜினிதேவி வீணை, க. கௌரிஅம்பிகை வீணை, சு. வனஜா வீணை, க.சாந்தி, த.ரவீந்திரன்புல்லாங்குழல், இ. வசந்தமலர், சோ. நடராசசர்மா வயலின், க. புவனகாந்தி.

### இரண்டாம பகுதி

[சாதாரணபிரிவு]

மு. ஜயதேவி, ஜெ. திருச்செல்வி, க. யோகவல்லி வயலின், ந. ஈஸ்வரி வீணை, சி. தபோதினி வீணை, O மீ. பாலசுப்பலட்சுமி வயலின், வி. நாகேஸ்வரி, து. சியாமளா, எஸ்.யோய் வயலின், O நா. O மகாலட்மி, ஆ. வசுந்தராதேவி வயலின், Oசே. ராதா, க. சாந்தகுமார், சீ. ராஜலட்சுமி, செ. அம்பிகா.

[சாதாரணபிரிவு]

ந. சகுந்தலா, அ.புஷ்பவதி, சு. வனஜா, இ. பங்கயலோஜனி, கே. சக்திமுகன் வயலின், சு. சத்தியதேவி வயலின், சி.சுசீலா வீணை.

### மூன்றும் பகுதி

[சாதாரணபிரிவு]

த. சத்தியபாலதேவி, இ. இரத்திஜேஸ்வரி வயலின், ந. வாசுகி, ந. ரேணுகா வயலின், த. புவனேஸ்வரி, நா. உமாகாந்தி, சி. மிருதுபாஷனி வீணை, யோ. மேரி பிரேமலா, க. ரவீந்திரன் வயலின், நா. உஷா வயலின், ச. ஜெயக்குமார் ஜலதரங்கம்.

### நான்காம் பகுதி

[சாதாரணபிரிவு]

கு. சுபத்திரா, வி. பாஸ்கரி, ச. ஜெயகுமாரி வயலின்.

### ஐந்தாம்பகுதி

[சாதாரணபிரிவு]

ச. ஸ்ரீகாந்தா புல்லாங்குழல்.

### ஆசிரியர் பகுதி

[சாதாரண பிரிவு[

பொ. சுந்தரலக்ஷ்மி வீணை. த. இந்திரா.

(5-ம் பக்கம் பார்க்க)

ஜெனரல் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்

பழைய டயர்களை புதுப்பிக்கும் வேலைகளுக்கும் சகலவிதமான றப்பர் சாமான்களுக்கும் தொழில் நிலையங்களுக்குத் தேவையான தற்காலிக கட்டட தளபாடங்கள் றப்பர் பொம்மைகள் ஆகியவற்றுக்கும்

எம்முடன்தொடர்பு கொள்ளுங்கள்

20, ஸ்ரான்லி றேட், — யாழ்ப்பாணம்.

45, அம்பலவாணர் றேட், யாழ்ப்பாணம்.

போன்: 7024

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

அரசாங்க

கேள்விப் பத்திரங்கள்

நீர்ப்பாசன திணைக்களம்

என் 445-வவுனிக்குளம் உப பிரிவில் கொல்லன் பிளாங் குளத்தில் [1] காடு வெட்டலும், மண் வேலையும் [2] 200 அடியுள்ள வான் கட்டுதல்.

என் 472-முல்லைத் தீவு உப-பிரிவில் முத்துஐயன் கட்டுக்குளத்தில் வலது கரைப் பெருவாய்க்கால் கட்டுதல்.

பொதுவேலைத் திணைக்களம்

என் 473- [1] தலைமன்ஞர் தபாற்கந்தோர் கட்டிடங்களுக்கு மேலதிகமான வேலைகளும், திருத்தங்களும் செய்தல். [2] முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம்-முல்லைத்தீவு வீதி 30-ம் கட்டையிலும், கண்டி-யாழ்ப்பாணம் வீதி 140-ம் கட்டையிலும் 1/2'', 3 4'' கற்கள் வழங்கி, ஒப்புக் கொடுத்தல். கேள்விகள் முடிவு திகதி 29-3-67.

இதன் முழு விபரங்களுக்கும் 2-3-67இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் Iம் பகுதி, IIம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளைச் சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப-தபாற்கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 2087

## ஏலவிற்பனை

நிவித்திகலை, வட்டா பொத்தை வீதி 10-ம் இலக்க கடையில் நகை அடைவுபிடிக்கும் கா. கனகரத்தினம் அவர்களிடம் 10-3-65 முதல் 28-2-66 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவையும்1967மார்ச்மாதம் 15-ம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்;

பி. வெங்கடாசலம்
Auctioneer & Broker

143, மெயின்வீதி,
இரத்தினபுரி,
18-2-1967. 2450

## உதயசூரிய வென்றான்

உடுப்பிட்டி, வெள்ளி

ஆத்தியடி விளையாட்டுக் கழகத்திற்கும், புலோலி தெற்கு உதயசூரியன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே சிநேகித பூர்வமாக நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் உதய சூரியன் விளையாட்டுக்கழகம் 3 ஓட்டங்களாலும் 6 விக்கெட்டுக்களாலும் ஆத்தியடி விளையாட்டுக்கழகத்தைத் தோற்கடித்தது.

## வெற்றிதோல்வி இல்லை

குரும்பசிட்டி, வெள்ளி

தெல்லிப்பழை ஶ்ரேயல் விளையாட்டுக்கழகமும் சுன்ஞகம் விளையாட்டுக்கழகமும் கலந்துகொண்ட சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இவ் ஆட்டம் கட்டுவன் ஞானோதய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30 6-30, 9-45
ஓயாதினங்களில் 4 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர்- விஜயகுமாரி நடித்த
கைதியின் காதலி

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.—விஜயா நடித்த
தொழிலாளி

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
Vincent Price
Debra Paget
in
HAUNTED PALACE
சிவராத்திரியை முன்னிட்டு
8-3-67ல் இருந்து
சம்பூரண மகாபாரதம்
திரையிடப்படும்
கலரி: சதம் 50

REGAL - JAFFNA
NOW SHOWING
Ed Fury
Moira Orfet
in
URSUS


# பாலமுரளியின் கச்சேரி

பாலமுரளிகிருஷ்ண ஒரு அவதாரம் என்னும் எண்ணத்துடன் அவரின் கச்சேரியைக் கேட்க யாழ். நகரமண்டபத்திற்குச் சென்றிருந்தேன். கச்சேரி முடிவில் பெரும் மனக்குழப்பத்தோடு வீடு சென்றேன். காரணங்கள் பல.

கச்சேரியோ தேவகானம் எனில் மிகையாகாது. சங்கீத மும்மூர்த்திகள் போன்றோர் இறையருளால் இசையமுதம் பொழிந்தனர் என்பதின் கருத்தை உணரக்கூடிய வாய்ப்பை பாலமுரளியின் கச்சேரி ஈர்ந்தது. பாலமுரளியின் சாரீர வசதி என்னே! வாணவேடிக்கைகள் காட்டக்கூடிய சாரீரத்தின் திறமை நிச்சயம் ஒரு கொடை என்றே கருத வேண்டும்.

ஐரோப்பிய சங்கீதத்தில் கையாளப்படும் குரல் கட்டுப்பாடு நன்ருகக் கையாளப்பட்டிருந்தது. மேல் நாட்டிசையில், தென்றல், நீர்வீழ்ச்சி, இடிமுழக்கம் போன்ற இயற்கைச்செயல்களை இசைமூலம் வர்ணிக்கும்அமைப்பு உள்ளதுபோல இவற்றை மிடற்ருேசையில் எடுத்துக்காட்டும் திறனுடைய சாரீரம் இவருக்கு அமைந்திருப்பது போற்றத்தக்கதன்ருே. அவரின் பாணிஒரு தனிப்பாணியாய் இருப்பினும், ராகபாவம், ரக்திப்பிரயோகம், தாட்டுப்பிரயோகம், வாரி, சம்வாரி ஸ்வரப்பிரயோகம், ஜாருக் குழைவுகள், திரிஸ்தாயி சஞ்சாரங்கள் முதலியவை நுணுக்கம் நிறைந்தனவாக, மடை திறந்த வெள்ளமென பெருக்கெடுத்தோடி ஆனந்தக் கடலில் ஆழ்த்தவல்லன வாயிருந்தன. அவரின் ஸ்ருதி ஸ்வரஞானம் பிரமிக்கத்தக்கதாயிருந்தது. கற்பனஸ்வரத்தில் கற்பனைத் திறன் மிதமிஞ்சி நின்றது. என்ன புதுமை! என்ற திறமை! என்றெல்லாம் எண்ணங்கள் ஓடின. அநேகமான உருப்படிகள் அவரின் சொந்த உருப்படிகளாயிருந்தன. வடநாட்டு சங்கீதத்தின் அம்சங்கள் சிலவற்றைத் தழுவி இவருடைய பாணி அமைந்துள்ளது இவர் ஒரு புரட்சிப் பாடகர் என்னும் அபிப்பிராயத்தை உண்டுபண்ணியுள்ளது. மேலும் ஷட்சம், சட்சுருதி ரிஷபம், பிரதி மத்திமம்காகலி நிஷாதம் என்னும் 4 ஸ்வரங்களால் மட்டும் ஆகிய ராகம் ஒன்றை அமைத்து அதைக் கல்யாணிபோன்ற பழமையான ராகங்களைத் திடமாகப் பாடுவதுபோல கீர்த்தனம், கற்பனஸ்வரம் முதலியவற்றுடன் சர்வசாதாரணமாக இனிமையுடன் பாடிப் பொருத்தமாக 'சுமுகம்' எனப் பெயரிட்டமை இவரின் தெய்வீக ஆற்றலை விளக்கியதுபோலாகும். இப்படிப்பட்ட மேதைகள் இசையுலகில் இன்று உள்ளமை எம் தவப்பயனே எனவும் எண்ணம் வந்தது. இருப்பினும் தவப்பயன் அவப்பயனுகிவிடுமோ என்றும் ஐயம் எழுந்தது.

கலையின் வளர்ச்சியை நோக்க ஒரு தெய்வீகக் கலைஞன் படைக்கத் தலைப்படின் அவன் தன் உணர்ச்சியின் அலைகளை அள்ளி அள்ளி வீசக் கட்டுப்பாடில்லாத பூரண சுதந்திரம் அளிக்கப்படவேண்டும். எனினும் புதுமையைச் சமைப்போன் கலையைப்பேணும் நோக்கத்தில் ஒரு முக்கியகொள்கையுடையோனய் இருத்தல் அவசியமாகும். அதுயாதெனில் பழமையுள் புதுமையைத் திணிக்காமையே. பெரும்புகழ்வாய்ந்த சாகித்திய கர்த்தாக்களாலும் சம்பிரதாயத்தில் பேணப்பட்ட லட்சியசாகித்தியங்களாலும் காப்பாற்றப்பட்டு விருத்தியடைந்துள்ள எமது கர்நாடக இசையின் பழைய உருப்படிகளில் புதுமையைத் திணிப்பது முறையன்று. இவற்றைப் பழைய பாணியிலேயே காத்துவைத்து புதுக்கருத்துக்களமைந்த புது கானங்களை ஆக்கி, பாலமுரளியின் ''லளித சங்கீதம்'' போன்ற புதுவகைகளைச் சிருஷ்டிப்பதே சிறந்தது.

யாழ்ப்பாணத்தில் அமைந்த பாலமுரளியின் கச்சேரி தியாகராஜ உத்சவ நிதியின் ஆதரவில் அமைக்கப்பட்டிருந்ததால், பாலமுரளி அவர்கள் தியாகராஜரின் உருப்படிகள் பலவற்றைச் சம்பிரதாய முறைப்படி பாடியபின் தன் சொந்த உருப்படிகளைப் பாடியபின் தன் சொந்த

[6-ம் பக்கம் பார்க்க]

## வடஇலங்கை ......

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

### திருகோணமலை

**முதலாம்பகுதி**
[சாதாரண பிரிவு]

கா. இந்திராணி வீணை, க. சிவகங்கா, செ. பாலேஸ்வரி வயலின், ச. அருந்ததி, ர. கௌரிவதன, ம. சத்தியராணி, ச. ஜெகதாம்பிகையம்மா வயலின், ம. உதயணன், ஆ. துஷ்யந்தி.

**இரண்டாம் பகுதி**
[சாதாரண பிரிவு]

O ஞா. தையல்நாயகி, O ந. கீதசாந்தி, O ந. செல்வரஜனி, O ந. சந்திரலேகா வயலின், ச. பிரேமலா, சி. சுந்தரவல்லி, O வி. கலாதேவி வயலின், து. ரங்கநாயகி, கி. புஷ்பராணி.

**மூன்றும் பகுதி**
[சாதாரண பிரிவு]

O சி. மஞ்சுளாதேவி, ரா. விஜயகுமாரி, சி. சாந்தினி, O சி. வசுமதி.

**நசன்காம் பகுதி**
[சாதாரண பிரிவு]

ச. ஜெயலக்ஷ்மி,

### மட்டக்களப்பு

**முதலாம் பகுதி**
[சாதாரண பிரிவு]

சி. ரஞ்சினி, க. ரஞ்சினி, ஃ ந. லட்சுமி.

**இரண்டாம் பகுதி**
[சாதாரண பிரிவு]

வே.ரவிந்திரகுமாரி, நோ. இராசம்மா, க. ஜெயமாலினி.

**மூன்றும பகுதி**
[சாதாரண பிரிவு]

வே. விஜயகுமாரி, ப. விமலாதேவி வயலின், த. பூமணி, த. மங்களேஸ்வரி, சி. நாகேஸ்வரி, கு. ரேவதி வீணை.

### மிருதங்கம்

### யாழ்ப்பாணம

**முதலாம பகுதி**
[சாதாரண பிரிவு]

நா. லட்சுமன், சு. கிருபானந்தன், ரா. நடராசா, ந. சிவசீரன், த. சந்திரமோகன், க. கிருஷ்ணனந்தன், ஃ பொ. திருபுரச்சந்திரன், ச..கந்தையா, ச. சாந்திகுமார், ஃ செ. குகன். பொ. ஜெபநேசன், ஃ க. பரமேஸ்வரன், இ. கணேசராசா, சு. பத்மசோதி, ஃ ஆ. சுவாமிநாதசர்மா, வே சுகுமாரன், ஃ சி. ராமரத்தினம்.

**இரண்டாம பகுதி**
[சாதாரண பிரிவு]

பொ. பாலசுப்பிரமணியம், சி. நவரட்னராசா, ந. ரவீந்திரநாதன், செ. இராகவன், இ.சிவபாலேந்திரன், ச. ஶ்ரீகரன், அ. ரகுநாதன், மு. நித்தியானந்ததேவி, ச. இராஜேந்திரா, இ. மணிவாசகன், கெ. பரமேஸ்வரன், இ. புஷ்பராசா, ப. கிரிதரன், ப. ராகவன், ம. ரவிச்சந்திரா, ச. நாகேஸ்வரன், செ. சண்முகலிங்கம், சி. ஶ்ரீகணேசன், பொ. சுகாந்தா.

ஐ. ஜெயமணிதேவி சி. சிவஞானம் மு. வரோதராசா, ஞா. சாள்ஸ், அ.கமலேசன், ஐ. சிவபாலன், ச. கானமூர்த்தி,ம. கமலக்கண்ணன், உ. ரங்கா.

**மூன்றும் பகுதி**
[சாதாரண பிரிவு]

இ. பாலஶ்ரீ, சி. மகேந்திரன்.

### மல்லாகம்

**முதலாம் பகுதி**
[மிருதங்கம்]
சாதாரண பிரிவு

ச. கனகசபாபதி சர்மா, அ. விக்னேஸ்வரன், ஃ பெ

குமரேசன், க. ஶ்ரீதரன், ஏ. பி.ஞானப்பிரகாசம்,நா. சிவகுகன், சு. வரதராஜன், வா. கதிர்காமநாதன், ச. சிவசுப்பிரமணியம் க.தயாளகேசரி.

**மூன்றும் பகுதி**
[சாதாரண பிரிவு]

மிருதங்கம்
ப. சின்னராசா

### சாவகச்சேரி

**முதலாம் பகுதி**
[சாதாரண பிரிவு]

மிருதங்கம்
க. சேய்ந்தன், சே. ராகுலன், த. ஶ்ரீகுகநிர்மலன், பொ. பரதலிங்கம், ந. ஶ்ரீகரன், மு. சுதந்தரபாலன், ச. ரஞ்சன், த. ராதாகிருஷ்ணன்.

O இவ்வடையாளம்மிடப்பட்ட பரீட்சார்த்தி சாஸ்திரப் பரீட்சையில் விசேஷ சித்தியும் ஃ இவ்வடையாளமிடப்பட்ட பரீட்சார்த்தி சாதன பரீட்சையில் விசேஷ சித்தியும் பெற்றுள்ளதைக் குறிக்கும்.

[முற்றும்]

## வரி விளம்பரம்

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

## மகாசிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், சனி

நாவற்குழி இந்துவாலிபர் சங்கம் இம்முறை சிவராத்திரி விழா கொண்டாட ஏற்பாடுசெய்துள்ளது சித்தி விநாயகர் ஆலயத்தில்நடைபெற இருக்குப் இவ்விழாவில் சங்கீத பூசணம் திருமதி கமலம் மகாலிங்கம், செல்வி இரத்தினேஸ்வரி வேலுப்பிள்ளை, செ. தம்பிராசா ஆகியோரின் இன்னிசைக்கச்சேரி இடம் பெறும்.


இப்பொழுது திரையிடப்படுகிறது

கிங்ஸ்லி கொழும்பு | பிளாஸா வெள்ளவத்தை | நவா கொம்பனித்தெரு

விஜயா
மட்டக்களப்பு

மற்றும் நாலு திரைகளில்

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடிக்கும்

தாயின் மடியில்

இப்பொழுது திரையிடப்படுகிறது
வெலிங்டன்
யாழ்ப்பாணம்

ஜெமினி கணேசன — சாவித்திரி
அசோகன், தங்கவேலு, மணிமாலா
முதலியோர் நடித்த

வல்லவனுக்கு வல்லவன்


## தமிழாராய்ச்சி மகாநாடு

அகில உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இரண்டாவது ஆராய்ச்சி மகாநாடு சென்னையில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடத்தப்படும். அம்மகாநாட்டில் பங்குபற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்க விரும்பும் சங்கங்களும் தனிப்பட்ட அறிஞர்களும் கீழ்க்காணும் விலாசத்துக்கு உடனே எழுதும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்ருேம்.

142, புல்லர்வீதி,
கொழும்பு.

கு. பாலசிங்கம்,
தகவல் குழுத்தலைவர்.
2454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு உற்பத்திக்கு வவனியாவில் காணி

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

வவனியா, வெள்ளி

வவனியா மாவட்டத்தில் உணவுற்பத்திக்கு பெருமளவு காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் இலங்கை முழுவதிலுமிருந்தும் கோரப்பட்டிருக்கின்றன.

வவனியா தெற்கு தமிழ் பிரிவுக்காரியாதிகாரியின் பகுதியிலிருந்து வழங்கப்படும் காணிகளின் விபரம் வருமாறு:-

வவனியா நகரம் 8 ஏக்கர் புதுக்குளம் 718 எக்கர், ஆசிகுளம் 300 ஏக்கர், கள்ளிக்குளம் 440 ஏக்கர், ஓமந்தை 3020 ஏக்கர், ராஜேந்திரம் குளம் 985 ஏக்கர், மருதமடு 1035 ஏக்கர், நெளுக்குளம் 1645 ஏக்கர்.

மற்றும் காணிகள் வழங்கப்படும் குளங்கள்வருமாறு: செட்டிகுளம்[காரியாதிகாரி பிரிவு] முத்துலிங்க குளம் 1975 ஏக்கர், ஆண்டியாள புளியங்குளம் 800 ஏக்கர்' சூடுவெந்தபுலவு 490 ஏக்கர் செட்டி எம் 985 எக்கர்

முல்லைத்திவு [காரியாதிகாரி] அம்பலவான் பொக்கணை 655 ஏக்கர், தண்ணீரூற்று 450 ஏக்கர், முள்ளியவளை 700 ஏக்கர், கொக்குத்தொடுவாய் 775 ஏக்கர், குமுளமுனை 1300 ஏக்கர், புதுக்குடியிருப்பு 1300 ஏக்கர்.

நெடுங்கேணி [காரியாதிகாரி பிரிவு] ஊஞ்சால்கட்டி 1650 ஏக்கர், மாங்குளம் 400 ஏக்கர், ஒலுமடு 235 ஏக்கர், ஒட்டிசுட்டான் 50 ஏக்கர், தண்டுவான் 270 ஏக்கர், கனகராயன்குளம் 280 ஏக்கர், புளியங்குளம் 155 ஏக்கர், பரந்தன் 290 ஏக்கர், நெடுங்கேணி 1062 ஏக்கர்.

விண்ணப்பதாரர் கவனிக்கப்படவேண்டிய விதிகள்.

எல்லா மனுப்பத்திரங்களும் அவ்வவ்பகுதி காரியாதிகாரிகளுக்கு விலாசமிட்டு 28-3-67 அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியதாய் அனுப்பப்படவேண்டும்.

இவ் உறுதிப் பத்திரங்களைப்பெறுவதற்கு உண்மையான கிராமவாசிகளே உரித்துடையவர்களாவர். இவ் உறுதிப் பத்திரங்கள், கிராமசேவகரின் பகுதியிலுள்ள காணிகளுக்கு அப்பகுதிகளில் வசிக்கும் மனுதாருக்கே வழங்கப்படும். 3 ஏக்கருக்கு மேற்படாத காணிகளே ஒவ்வொருவருக்கும்கொடுக்கப்படும். 3 மாதகுல்லைக்குள் பயிர்ச்செய்கைக்காகக்காணி திருத்தப்படவேண்டும்.

ஐ. நா. உடன்படிக்கை

### இந்தியாவும் கைச்சாத்திட்டது

புதுடில்லி, மார்ச். 3

இனவேறுபாட்டைக் கண்டிக்கும் ஐ, நா. உடன்படிக்கையில் 55வது நாடாக இந்தியா கைச்சாத்திட்டுள்ளது.

1965-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இந்த உடன்படிக்கைக்காக இனவேறுபாட்டை எல்லா அம்சங்களிலும் கண்டிப்பதுடன் அவைகளைக் களைவதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வது என்றும் கூறுகின்றது.

### பாலமுரளி....

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

உருப்படிகளைப் பாடியிருப்பின் அக்கச்சேரி பயபக்தி, குருபக்தி ததும்பியதாக மிளிர்ந்து மக்கள் மனதில் அழியாச் சித்திரமாகப் படிந்து பாலமுரளி தியாகையரின் அவதாரம் தானோ என ஐயுறச்சிந்தனையைக் கிளப்பிவிட்டிருக்கும். தியாகையரின் படத்தை நிலத்தில் வைத்து அவர் மேடைமீதமர்ந்து பாடியமை சரியல்ல. பக்கவாத்தியத்தை ஊக்குவித்தாலும் பகலமுரளியின் கானம் தங்குதடையின்றி தாராளமாகப்பொழிந்ததாலும் கச்சேரி பிரமாதமாயிருந்தும், சககீதத்திற்கேற்ற அமைதியான சூழ்நிலை அமைந்திருக்கவில்லை. விரிவாகச் சொல்லப்புகின், ஒரு குழந்தை கைப்பொம்மையொன்றை வைத்துத் தன் இஷ்டப்படி அதிசாமர்த்தியமாக விளையாடியது போலிருந்ததேயன்றி இறைவன் புகழ் பாடி முத்திப்பேறடைய எழுந்த எம் இசை வித்துவான்கள்பலர் இருந்த சபையொன்றில் இசை மேதையொருவரால் கையாளப்பட்டது போன்ற உன்னத மனப்பான்மை அமையவில்லை. பாலமுரளிகிருஷ்ணு அவர்கள் இக் குறையை நீக்குவாரெனின் மானிடருள் தேவரென மதிக்கப்படுவதோடன்றி அவர் இசையுலகிற்குப் பெரும்பணியாற்றிய பெருமானுவார். இதற்குஅவரிடம் ஆற்றலுண்டு.

-ஸ்ரீதேவி பத்மநாதன்.

### வங்கிசேவைகள்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

தில் வெளிநாட்டுச்செலாவணியில் கஷ்டங்கள்ஏற்பட்டிருப்பதையும் கருத்திற்கொண்டே வங்கிகள் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்த ஆலோசனை நடைபெற்று வருவதாகச்சொல்லப்படுகிறது.

இம்மாதம் 5ந் திகதி மந்திரிசபை கூடும்பொழுது இவ்விஷயம் ஆலோசனைக்கு எடுக்கப்படும்.

#### கமிஷன் நியமிக்கப்படுமா?

வங்கி ஊழியர்கள்வேலைக்குத்திரும்பியதும் ஒரு கமிஷன் நியமித்து ஊழியர்களின் சகல பிரச்னைகளையும் தீர்க்கநடவடிக்கை எடுக்கப்படலாமென்றும் கூறப்படுகிறது.

பூநரியில்

### கால்சட்டைத்துணி விநியோகத்தில் மோசடி?

பூநகரி, வெள்ளி

ஜப்பான் கால்சட்டைத் துணி இங்கு குறிப்பிட்ட ஒரு சிலருக்கே கொடுக்கப்பட்டுள்ளதாக புகார் கூறப்படுகிறது.

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவரும், கூட்டுறவுப் பரிசோதகர்களும் சேர்ந்து இந்தக் கால்சட்டைத் துணியை ஒரு சிலருக்கு மட்டும் வழங்கியுள்ளதாக பொதுமக்கள் குறை தெரிவித்து, பெருத்த அதிருப்திக் குள்ளாகியிருப்பதாகத் தெரிகிறது. இதுசம்பந்தமாக ப. நோ. கூ. சமாச கறுக்காய் தீவு அங்கத்தவரும், செட்டிகுறிச்சி அங்கத்தவரும் ராஜினமாச் செய்திருப்பதாகத் தெரிகிறது.

பூநகரிக்கு வெளியே உள்ள சிலருக்கே இந்தத் துணிகள் வழங்கியிருப்பதாகவும், இந்த துணிவிநியோகத்தில் நடந்தஊழல் சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்கும்படியும் மேல் அதிகாரிகளுக்கு புகார் செய்யப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாவிட்டால் இம்மாதம் 6-ம் தேதி பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்துக்கு முன்னல் சத்தியாக்கிரகம் நடாத்த தாம் திட்டமிட்டிருப்பதாகவும் பொதுமக்களில் ஒருசாரார் எச்சரிக்கை விடுத்திருப்பதாகவும் தெரிகிறது.

### வாக்குவாதம் கைகலப்பாகியது

#### ஒருவர் ஆஸ்பத்திரியில்

உடுப்பிட்டி. வெள்ளி

வாக்குவாதம் கைகலப்பாக மாறியாதைத் தொடர்ந்து ஒருவர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கரணவாய் தெற்கு, மண்டான் என்னும் இடத்தில் இளையவன் கிட்டிணன் என்பவருக்கும், சின்னத்தம்பி என்பவருக்குமிடையே ஒரு சோடி பவுண்காப்பு சம்பந்தமாக எழுந்ததாகக் கூறப்படும் தகராறுகைகலப்பாக மாறியதினல், இளையவன் கிட்டிணன் மண்வெட்டியினல் தாக்கப்பட்டு அபாய கரமான நிலையில் ஆஸ்பத்திரியில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சந்தேக நபரன சின்னத்தம்பிஎன்பவரைப் பருத்தித்துறைப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

### முல்லைத்திவில் மீன்பிடித் துறைமுகம்

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவில் மீன்பிடித் துறைமுகம் விரைவில் அமைக்கப்படவிருக்கிறது. இதற்காக வவனியா எம். பி. எடுத்துக்கொண்ட முயற்சி பலனளித்துள்ளது. மீன்பிடி அமைச்சர் வவனியா எம். பி. பலமுறை வற்புறுத்தியதைத் தொடர்ந்து மீன்பிடிஅமைச்சு முல்லைத்தீவில் மீன்பிடித்துறைமுகமொன்றை அமைப்பதற்குச் சம்மதித்துள்ளது.

மீன்பிடித்துறை முகத்தை அமைப்பதற்கு முதல் கட்டமாக ஜெர்மன் நிபுணர்கள் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்து இடத்தைப்பார்வையிட்டுச் செல்லுகின்றனர். துறைமுகத்தை அமைப்பதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பமாகுமென்றும் தெரிகிறது.

## நடிகர் பாலையாமீது வருமானவரி வழக்கு

சென்னை, மார்ச் 3.

நடிகர் டி. எஸ். பாலையா மீது வருமானவரி கணக்குகள்பற்றிய விபரங்களை சரிவரக் காட்டவில்லையென்ற குற்றச்சாட்டின் பேரில் சென்னை நீதிமன்றம்ஒன்றில் வழக்கொன்று தாக்கல்செய்யப்பட்டது.

1958-ம் ஆண்டிலிருந்து 1962ம் ஆண்டுவரையிலான காலத்தில் வருமானவரிக்கு அவர் 'டிமிக்கி' கொடுத்ததாக அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

1958ல் இருந்து 59ஆண்டு வரை 8 ஆயிரம் ரூபாய்க்கும் 59ல் இருந்து 60வரை 11 ஆயிரம் ரூபாய்க்கும், 60-ல் இருந்து 61வரை 50 ஆயிரத்து 100 ரூபாய்க்கும் 61-ல் இருந்து 62வரை 13 ஆயிரம் ரூபாய்கும் அவர் கணக்கு விபரம்தரத் தவறிவிட்டதாக வருமானவரிப் பகுதியினர் திரு. பாலையாமீது குற்றஞ்சாட்டியுள்ளனர்.

### இரணைமடுக்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

நேற்று யாழ்ப்பாணம்அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற விசேஷ மாவட்ட இணைப்புக்குழுமுன் கூட்டத்தில் மேற்படி மகாநாடு நடத்துவதெனறு தீர்மானிக்கப்பட்டது.

வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேலதிக மாவட்ட அதிபர், மாவட்டகாணி அதிகாரிகள், யாழ்ப்பாண மாவட்ட எம்.பி.க்கள், காரியாதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலயபிரவேசம், சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டன. இதுசம்பந்தமாகவுள்ள சட்டங்கள்பற்றி விளக்கிக்கூற ஆலயபரிபாலகர்கள், தர்மகர்த்தாக்கள் ஆகியோருடன் மீண்டுமொருதடவை அரசாங்க அதிபர் ஒரு மகாநாடு கூட்டிப் பேச்சு வார்த்தை நடத்துவது பற்றியும், சிறுபான்மைத்தமிழர் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

நீர்கொழும்பிலுள்ள 'எக்கலதொழில் பேட்டையைப் போன்று யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஒரு கைத்தொழிற்பேட்டை அமைப்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. சுமார் 50அல்லது 60 ஏக்கர் காணியில் இக்கைத்தொழிற் பேட்டையை நாவற்குழி, இயக்கச்சி, அச்சுவேலி, வல்லை, பொன்னலை ஆகிய இடங்களில் ஒருஇடத்தில் அமைப்பதுகுறித்தும் ஆராயப்பட்டது. [ந.நி.]

### கந்தபுராணம....

[2-ம்பக்கத்தொடர்ச்சி[

சிறப்பியல்புகளைப்பற்றியும், அவரது ஆழ்ந்த தமிழ்ப் பற்றையும் குறிப்பிட்டார்கள்.

வடமாநிலக்கல்வி அதிபதி திருமதிநவரத்தினம், பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை, திரு. கி. இலட்சுமணன் திரு. கு. சண்முகநாதன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்கள்.

சைவாசிரிய கலாசாலை முன்னுள் அதிபர் திரு. சி. சுவாமிநான் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்கு பொன்னடை போர்த்துக் கௌரவித்தார். மேற்படி புராண படனத்தில் மூன்று பாட்டுக்களும் வாசித்து விழாவில் உரைசொல்லப்பட்டன [ந. நி.]

### ஜனதிபதி பதவி

#### ஜயப்பிரகாஷ் விருமபவில்லை

புதுடில்லி, மார்ச்.3

ஜனதிபதியாக தாம் நியமிக்கப்மடுவதுபற்றி தாம் சிறிதுகூடஅக்கறை கொள்ளவில்லையென்று திரு. ஜயப்பிரகாஷ் நாராயன் இன்று பட்னுவில் கூறினுர்.

புதிய ஜனதிபதியாக தம்மை இருக்கும்படி சிலர் யோசனை கூறியிருப்பது பற்றி நிருபர்களிடம் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினுர். தற்போது உப ஜனதிபதியாக இருக்கும் சாகிர்ஹுசேன்தான்அதற்கு தகுந்தவர் என்று கூறிய திரு நாராயண் இந்தியா இனபேதமற்ற நாடு என்பதை நிருபிக்க சாகிர் ஹாசேன ஜனதிபதியாகத் தெரிவுசெய்யப்படவேண்டும் என்ருர்.

### மே.வங்காள மந்திரிகளுக்கு

#### இந்திரா பாராட்டு

புதுடில்லி, மார்ச். 3

தமது அரசாங்கத்துக்கு ஆலோசனைசள் கூறும்முகமாக காங்கிரஸ் அல்லாத எல்லா கட்சிகளினதும் தலைவர்களைக்கொண்ட ஒரு குழு அமைக்கப்படுமென்று மேற்கு வங்காள முதன் மந்திரி திரு. அ. ஜோய்முகர்ஜி அறிவித்திருக்கின்ருர்.

மேற்குவங்காளத்தில் பதவிக்கு வந்திருக்கும் காங்கிரஸ் அல்லாத முதல் ராஜ்ய அரசாங்கத்துக்கு பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி பாராட்டு தெரிவித்திருக்கின்ருர்.

### கொலை முயற்சி வழக்கு

#### எதிரிகள் விடுதலை

மாவிட்டபுரம், வெள்ளி

பலாலி கொலைமுயற்சி வழக்கில் எதிரிகளை மல்லாகம் நீதிபதி திரு.டி.எஸ். நிற்சிங்கா விசாரணையின்பின் விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் பலாலியைச் சேர்ந்தவர்களான லூக்கஸ் அந்தோனிப்பிள்ளை, லூக்கஸ் மைக்கேல்பிள்ளை ஆகிய இருவரும் சென்ற வருதட செப்டம்பர் 17ந்திகதிஅமேயிடத்தைச்சேர்ந்த மத்தயஸ் அந்தோனிப்பிள்ளைஎன்பவரை ''றிவோல்வரா''ல் சுட்டுக்கொலைசெய்ய முயன்றதாகவும், அதேநேரத்தில் லூக்கஸ் மைக்கேல்பிள்ளை என்ற 2ம் எதிரி மத்தயஸ் அந்தோனிப்பிள்ளை, மத்தயஸ் ஜேமிஸ் ஆகிய இருவரையும் வில்லுக்கத்தியால் குத்திக் காயப்படுத்தியதாகவும் காங்கேசன்துறைப் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

### பாக் - ஹைகமிஷனர்

கொழும்பு, சனி

இலங்கையில் பாகிஸ்தான் ஹைகமிஷனராக விருந்த திரு. முரார்ட் நாளை காலை விமானமூலமாக தாயகம் திரும்பவிருக்கிருர். அவர் இலங்கையில் மூன்றரை ஆண்டுகள்கடமைபுரிந்திருக்கிருர்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org